Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, DECEMBER 12, 2023

செவ்வாய்க்கிழமை டிசெம்பர் 12, 2023 | ஒளி: 09 கதிர் 147 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE




# நிறைவேறியது 'வற்'

பெறுமதி சேர் வரி (வற்) (திருத்த) சட்டமூலம், பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (11) மாலை 4.50க்கு, விவாதமின்றி நிறைவேற்றப்பட்டது.

அச்சட்டமூலத்தை விவாதமின்றி நிறைவேற்றுவதற்கு ஆதரவாக 98 வாக்குகளும் எதிராக 41 வாக்குகளும் அளிக்கப்பட்டன. விவாதமின்றி நிறைவேற்றுவதற்கு 57 வாக்குகள் மேலதிகமாக அளிக்கப்பட்டன.

அதன்பின்னர் குழு நிலையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவை மீதும் வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டுமென எதிர்க்கட்சியினரால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதனடிப்படையில், ஆதரவாக வாக்குகளும், எதிராக வாக்குகளும் அளிக்கப்பட்டன. மேலதிகமாக வாக்குகளால் திருத்தப்பட்ட சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

# கொழும்பில் தமிழர்கள் இலக்கு



### தமிழர்களின் தகவல்களை திரட்டும் விவகாரம்

## மனோ ஆவேசம்

கொழும்பில் தமிழ் மக்களை மட்டும் இலக்காகக் கொண்டு தனிப்பட்ட தகவல்கள் திரட்டப்படுகின்றன. தமிழ் மக்களை இலக்காகக் கொண்ட தகவல் திரட்டல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட எம்.பி.யுமான மனோ கணேசன் ஆவேசமாக வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

## "நிறுத்த முடியாது"



தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் தனிப்பட்ட தகவல் திரட்டலை நிறுத்த முடியாது. தமிழர்களை மட்டும் இலக்காகக் கொண்டு தகவல் திரட்டவில்லை. கொழும்பு மாவட்டத்தில் வாழும் ஒட்டுமொத்த மக்களும் இதில் உள்ளடங்குகிறார்கள் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (11) விசேட கூற்றை முன்வைத்த தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரான மனோ கணேசன் எம்.பி. கொழும்பு மாவட்டத்தில் தமிழர்களை மட்டும் இலக்கு வைத்து பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் தகவல் திரட்டலை உடனடியாக நிறுத்த வேண்டும் என்ற வலியுறுத்தலை நிராகரித்தே இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இவ்வாறு கூறினார்.

தொடர்ச்சி P2

## "அநீதியை நிறுத்தவும்"



கொழும்பு தமிழ் மக்களை இலக்கு வைத்து பொலிஸார் மேற்கொள்ளும் அநீதி நிறுத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

கொழும்பில் தமிழ் மக்களை குறிவைத்து மீண்டுமொரு பதிவு நடவடிக்கை நடந்து வருவதாகவும்,இந்த அனைத்து பதிவு விபர பத்திர ஆவணங்களும் சிங்கள மொழியிலேயே வழங்கப்படுவதாகவும்,நாட்டின் அரசியலமைப்பை மீறி சிங்கள மொழியில் மட்டுமே இந்த விபர பதிவுப் பத்திர ஆவணங்களை வழங்குகின்றனர் என்றும் மனோ கணேசன் எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### இந்திய மீனவர்களின் அத்துமீறும் விவகாரம்

## "உயர்ஸ்தானிகரை சந்திக்க வாய்ப்பை ஏற்படுத்தவும்"

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன் பிடி தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகருக்கு விளக்கமளிக்க அரச, எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கு இந்திய தூதரகத்திலோ அல்லது பாராளுமன்றத்திலோ சந்திப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தர கடற்தொழில் அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்..பி. சார்ள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்தினார்.



தொடர்ச்சி P2

### தமிழர்களின் இன விகிதாசாரத்தை

## குறைக்கிறது மகாவலி சபை

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இன விகிதாசாரத்தை பெருமளவில் குறைத்த மகாவலி அதிகாரசபை, தற்போது வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் தமிழர்களின் இன விகிதாசாரத்தை குறைப்பதற்கு தொடர்ச்சியாக செயற்பட்டு வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்..பி. சார்ள்ஸ் நிர்மலநாதன் குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (11) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கடற்தொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சு ஆகியவற்றுக்கான

தொடர்ச்சி P2





## ஒரு நாடு இரு தேசங்களுக்கு புது அர்த்தம் கற்பித்த டக்ளஸ்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் "ஒரு நாடு இரு தேசங்கள்" என்ற கோஷத்துக்கு ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா "புது அர்த்தம்" ஒன்றை சபைக்கு கூறினார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (11) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் கடற்றொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பியான செல்வராசா கஜேந்திரன் உரையாற்றினார்.

தொடர்ச்சி P2

## 1,500 சிங்கள குடும்பங்களுக்கு வவுனியாவில் காணிக்கு ஏற்பாடு



மன்னார் மாவட்டத்தை விவசாயத்தில் அபிவிருத்தி செய்வதென்ற போர்வையில் கீழ் மல்வத்து ஓயா திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இந்த திட்டத்தினால் அநுராதபுரத்தில் 1500 சிங்களக்குடும்பங்கள் தமது காணிகளை இழக்கின்றார்கள் என்ற பொய்யான புள்ளி விபரத்தின் கீழ் இவர்களுக்கு தமிழர்களின் பூர்விக இடமான வவுனியா செட்டிகுளம் பகுதியில் கப்பாச்சி என்ற

தொடர்ச்சி P2



## ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை

ஜனாதிபதி தான்தோன்றித் தனமாக அரசியலமைப்பு பேரவையின் செயற்பாடுகளில் தலையை நுழைக்கின்றார். இது அரசியலமைப்பை மீறும் செயற்பாடாகும். இதனை அடிப்படையாக வைத்து, ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றப்பிரேரணை கொண்டுவருவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ள என

சுதந்திர மக்கள் பேரவையின் செயற்குழு உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், திங்கட்கிழமை (11) தெரிவித்தார்.

பேராசிரியர் ஜி.எல்.நாவல சுகந்த ஜனதா சபையின் பிரதான காரியாலயத்தில் திங்கட்கிழமை (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மாணவிகளை தொந்தரவு செய்தால் நடவடிக்கை

எம்.எஸ்.எம்.ஹனீபா

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் பாடசாலை செல்லும் மாணவிகளைத் தொந்தரவு செய்பவர்களைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயலத்தின் ஆலோசனைக்கமைய பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி விஜயவர்த்தன தலைமையிலான விசேட பொலிஸ் குழுக்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பெண் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகள் ஆரம்பமாகும் மற்றும் முடிவடையும் நேரங்களில் இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் மாணவிகளுக்குப் பின்னால் கூட்டமாகச் சென்று தொந்தரவு செய்வதோடு, அலைபேசியில் புகைப்படம் எடுப்பதாகவும் பெற்றோர் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## "நேரலைக்கு பதிலாக தாமதமாக ஒளிபரப்பவும்"



பாராளுமன்ற அமர்வுகளை நேரலைக்குப் பதிலாகத் தாமதமாக ஒளிபரப்புமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கோரியுள்ளார்.

ஹம்பாந்தோட்டையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய எம்.பி. ராஜபக்ஷ, நேரடி ஒளிபரப்பை இடைநிறுத்தி அரை மணி நேரம் தாமதமாக ஒளிபரப்பை வழங்குமாறு சபாநாயகர் மற்றும் அரசாங்கத்தின் பிரதம கொறடாவிடம் கோரிக்கை விடுத்ததாகக் கூறினார்.

தொடர்ச்சி P2



## பாடசாலைகளில் ஆபத்தான கட்டிடங்கள் அகற்றப்படும்

பாடசாலைகளில் உள்ள அபாயகரமான கட்டிடங்கள் மற்றும் ஆபத்தான மரங்களை அகற்றுவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. கம்பஹா மற்றும் மினுவாங்கொடை கல்வி வலயங்களிலிருந்து இந்த திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அவர்களின் பணிப்புரைக்கமைய இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

கம்பஹா மற்றும் மினுவாங்கொடை வலயங்களில் உள்ள அத்தகைய பாடசாலைகளின் பட்டியலை உடனடியாக வலயக் கல்வி அலுவலகங்களுக்குச் சமர்ப்பிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவுறுத்தினார்.

கம்பஹா மாவட்டச் செயலகத்தில் திங்கட்கிழமை (11) நடைபெற்ற கம்பஹா கல்விக் கட்டமைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## "உயர்ஸ்தானிகரை சந்திக்க வாய்ப்பை ஏற்படுத்தவும்"

அவருடனான சந்திப்பு ஒன்றுக்கு ஏற்கெனவே இணங்கியதற்கு அமையவே விரைவில் ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (11) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கடற்றொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

இந்தியாவின் கடல், இலங்கையின் கடல் இரண்டும் சரியான நேர் சீர் இல்லாததன் காரணமாக புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டி பிரதேசம், மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் முல்லைத்தீவு, திருகோணமலை போன்ற மாவட்டங்களில் இருக்கின்ற மீனவர்கள் குறிப்பாக இந்திய மீன்பிடிப்படகுகளின் அத்துமீறிய மீன்பிடி, எமது மீனவர்களின் படகுகளை சேதப்படுத்தல், வளங்களை அழிப்பதும் நீண்டகாலமாகத் தொடர்கின்றது.

இது தொடர்பாகக் கடந்த வாரம் கடற்றொழில் இராஜாங்க அமைச்சரின் ஆலோசனைக்கூட்டத்தில் ஆளும்,எதிர்க்கட்சி எம்.பிக்களினால் இவ்விடயம் தொடர்பில் இந்தியத் தூதுவருடன் தூதரகத்திலோ அவரை பாராளுமன்ற கட்டிடத்துக்கு அழைத்தோ சந்திப்பு நடத்த ஏற்பாடு செய்யுமாறு கோரப்பட்டது. அதற்கு அமைச்சும் இணங்கியது. எனவே அந்த சந்தர்ப்பத்தை அமைச்சு விரைவாக ஏற்படுத்தித் தரவேண்டும் என்றார்.

## குறைக்கிறது மகாவலி சபை

செலவுத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குற்றம்சாட்டினார்.

மன்னார் மாவட்டத்தில் 30,000 ஏக்கர் நெல் உற்பத்திக்கு நீர்ப்பாசனமாக பயன்படுத்தப்படும் பிரதான குளம் கட்டுக்கரைக்குளம். இந்தக் குளத்திற்கு கீழ் 162 சிறிய குளங்கள் உள்ளன. அந்த சிறிய குளங்கள் ஊடாகத்தான் நெற்பயிர் செய்கை, விவசாயத்திற்கு நீர் வழங்கப்படுகின்றது. கட்டுக்கரைக்குளத்திற்கான நீர் வரத்து வாய்க்கால் 28 கிலோ மீற்றர் கடந்த 30,40, வருடங்களாகத் துப்புரவு செய்யப்படவில்லை. இதனால் நீர் வரத்து தாமதப்படுகின்றது. அத்துடன் நீர் வேறு இடங்களுக்கும் செல்லும் நிலையும் ஏற்படுகின்றது. இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

கட்டுக்கரைக்குளத்தைப் பொறுத்தவரையில் சிறுபோக செய்கைக்கு நீர் பற்றாக்குறையுள்ளது. மழைக்காலத்தில் இந்தக்குளத்துக்கு வரும் நீர் கடலுக்கு செல்கின்றது. எனவே கட்டுக்கரை குளத்தை 2 அடி உயர்த்த வேண்டும்.

சமல் ராஜபக்ஷ லோக மல்வத்து ஓயா திட்டத்தை ஆரம்பித்தார். குறிப்பாக வவுனியா மாவட்ட மக்களுக்குக் குடி நீருக்காகவும் மன்னார் மாவட்டத்தின் விவசாயத்தை மேம்படுத்துவதற்காகவும் அந்த ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் பொருளாதார நெருக்கடி யாழ் அந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

மகாவலி அதிகாரசபை வவுனியா,முல்லைத்தீவு மாவட்டங்களில் 1988 ஆம் ஆண்டு எல் வலயமாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 35 வருடங்கள் முடிந்துள்ளது. இக்காலப்பகுதியில் தமிழர்களின் பல்வேறு பூர்வீக நிலங்கள் பறிக்கப்பட்டு தென்பகுதி மக்களுக்கு நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. இந்த மகாவலி அதிகாரசபை கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இன விகிதாசாரத்தை பெருமளவில் குறைத்திருக்கின்றது அதேபோல் தற்போது வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் தமிழர்களின் இன விகிதாசாரத்தை குறைப்பதற்கு தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றது. இந்த 35 வருடங்களில் இன்று வரை இந்த மாவட்டங்களில் ஒரு தமிழருக்கு கூட மகாவலி அதிகாரசபையின் அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லை என்றார்.



# கொழும்பில் தமிழர்கள் இலக்கு

## மனோ ஆவேசம்

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் சபையில் மிகவும் ஆவேசமாக வலியுறுத்திய மனோ கணேசன், பொலிஸார் தமக்குரிய வேலையை மட்டுமே பார்க்க வேண்டும். அதனை விடுத்து கிராம சேகவர் வேலையைப் பார்க்கக் கூடாது என்றார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (11) விசேட கூற்றை முன்வைத்த இவ்வாறு ஆவேசப்பட்ட அவர் மேலும் கூறுகையில்,

நாரஹேன்பிட்டி, கிருலப்பனை,, தெஹிவளை வெள்ளவத்தை,பம்பலப்பிட்டி, கொட்டாஞ்சேனை, , மட்டக்குளிய,முகத்துவாரம் ஆகிய பகுதிகளில் வாழும் தமிழ் மக்களை இலக்காகக் கொண்டு தகவல் திரட்டும் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

பொலிஸ் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் தகவல் கோருவதற்கான விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் விண்ணப்பங்கள் சிங்கள மொழியில் மாத்திரம் விநியோகிக்கப்படுகின்றன. பொலிஸ் கட்டளைச்சட்டம் பற்றிப் பேசும் இலங்கை பொலிஸுக்கு நாட்டின் அரசியலமைப்பு சட்டம் தெரியவில்லை. தமிழ் மற்றும் சிங்கள மொழிகள் நாட்டின் அரசகரும மொழிகளாக அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன. ஆனால் சிங்கள மொழியில் மாத்திரமே சகல விண்ணப்பங்களும் வழங்கப் படுகின்றன.



இது டிரான் அலஸின் பொலிஸ் இராச்சியமா, விக்ரமசிங்கவின் பொலிஸ் இராச்சியமா? அல்லது தேசபந்துவின் பொலிஸ் இராச்சியமா? இந்த நாட்டில் யுத்தம் இல்லை,பயங்கரவாதம் இல்லை அவ்வாறான நிலையில் ஏன் வீடு வீடாகச் செல்கின்றீர்கள். தனிப்பட்ட தகவல்களைத் திரட்டுகின்றீர்கள்?

பொலிஸார் தமக்குரிய வேலையை மட்டுமே பார்க்க வேண்டும். அதை விடுத்து கிராம சேகவரின் வேலையை பொலிஸார் செய்யக் கூடாது.

விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தில் முழு பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் மதம் உள்ளிட்ட தகவல்கள் கோரப்பட்டுள்ளன. மதம் தொடர்பான விபரங்களை ஏன் கேட்கின்றீர்கள். தீபாவளி, நத்தார் மற்றும் தைப்பொங்கலுக்கு வாழ்த்து அனுப்பப் போகின்றீர்களா? அதேபோல் பிறந்த திகதி கேட்கப்படுகிறது. பிறந்த தினத்துக்கு வாழ்த்து தெரிவிக்கபோகின்றீர்களா?

பாதாள குழுக்கள் மற்றும் சமூக விரோத செயற்பாட்டாளர்களுடன் பொலிஸாருக்கு தொடர்புண்டு. நான் ஒட்டுமொத்த பொலிஸாரையும் குற்றம்சாட்டவில்லை. 99 சதவீதமான சிறந்தவர்கள் உள்ளார்கள். எனவே தனிப்பட்ட தகவல்களை கோரும் போது பொதுமக்கள் அச்சமடைகிறார்கள். தொலைபேசி இலக்கத்தை வைத்துக் கொண்டு எதனையும் செய்ய முடியும். எனவே தமிழ் மக்களை மட்டும் இலக்காகக் கொண்டு இடம்பெறும் தகவல் கோரும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றார்.

## "நிறுத்த முடியாது"

கொழும்பில் தமிழர்களை மட்டும் இலக்காகக் கொண்டு தகவல் திரட்டப்படுவதாக மனோ கணேசன் கூறுவது பொய் .கடந்த முறையும் இவர் இதே பிரச்சினையை முன்வைத்த போது நான் அவரை தனிப்பட்ட முறையில் சந்தித்து தரவுகளைக் காண்பித்தேன் அத்துடன் பதிலளித்தேன் என்றார்.

கொழும்பு மாவட்டத்தில் வாழ்பவர்களின் விபரங்கள் பதிவு செய்யும் நடவடிக்கை 90 சதவீதமளவில் நிறைவு பெற்றுள்ளது . சிங்களம்,தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினர் இந்த தகவல் திரட்டலுக்குள் உள்ளடங்குகின்றனர் .இது தற்போது புதிதாக ஆரம்பிக்கப்படவில்லை. யுத்த காலத்திலிருந்து இவ்வாறு பொதுமக்களின் தனிப்பட்ட தகவல்கள் கோரப்படுகின்றன.பொலிஸ் ஊடாக தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

ஒரு தனிநபர் எங்கு தங்கியுள்ளார் என்பது தொடர்பான தகவல் தரப்படுத்தலைப் பேணுவதற்காகவே இவ்வாறு தகவல் கோரப்படுகிறது. இதில் தவறொன்றும் இல்லை. பெயர் உள்ளிட்ட தகவல் மாத்திரமே கோரப்படுகிறது. மதம் பற்றிக் கேட்கவில்லை. இனம் தொடர்பான விபரம் மாத்திரமே கேட்கப்படுகிறது. கடந்த முறையும் இவர் இவ்வாறு பொய் கூறினார். நாட்டில் யுத்தம் இல்லாவிட்டாலும் சமூக விரோத செயற்பாடுகள் தற்போது அதிகரித்துள்ளன. தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. ஆகவே, தகவல் திரட்டலை எதற்காகவும் நிறுத்த முடியாது. சிங்கள மொழியில் மாத்திரம் விண்ணப்பம் விநியோகிக்கப்படுகிறது என்று குறிப்பிட்டார். அது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கின்றேன் என்றார்.



## "அநீதியை நிறுத்தவும்"



இந்நடவடிக்கை தவறானது என்றும்,ஆட்களைப் பதிவு செய்யும் நடைமுறையொன்று உள்ளதாகவும்,இந்த பதிவு முறைக்குக் குறித்த நடைமுறையையே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும்,இதற்காக பொலிஸ் முறையைப் பயன்படுத்தி அநீதி இழைக்கக் கூடாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டின் தேசியப் பாதுகாப்பைப் போலவே குற்றங்களைக் குறைப்பதும் முக்கியம் என்றாலும், ஏதேனும் நியாயமற்ற முறை நடைமுறைப்படுத்துவதற்கு இடமளிக்க முடியாது என்றும், எந்தவொரு வேலைத்திட்டத்திலும் வெளிப்படைத்தன்மையும் ஜனநாயகமும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதையும் அவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

## ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுல்படுத்தியதன் மூலம் சர்வதேச சமூகம் இலங்கைக்கு சிவப்பு விளக்கு காட்டியுள்ளதாகத் தெரிவித்த பேராசிரியர், தேர்தல் காலத்தில் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும் என சர்வதேச சமூகம் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## பாடசாலைகளில் ஆபத்தான கட்டிடங்கள் அகற்றப்படும்

இவ்வாறான பாடசாலைகளை இனங்கண்டு, அடுத்த வருட ஆரம்பத்திற்குள், முன்னுரிமை அடிப்படையில் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.



## ஒரு நாடு இரு தேசங்களுக்கு புது அர்த்தம் கற்பித்த டக்ளஸ்

மயிலிட்டி துறைமுகம் சிங்களவர்களின் கைகளுக்கு விட்டதாகவும் அப்பகுதி மக்கள் துறைமுகத்துக்குச் செல்ல முடியாத ஏற்பட்டுள்ளதாகவும் அத்துடன், வடக்கில் கடலட்டை பண்ணையை அமைக்கும் விடயத்தில் பாரிய நிதி மோசடி இடம்பெற்றுள்ளது . இதில் கடற்தொழில் அமைச்சுக்கும் பெரும்பங்குண்டு என்றும் குற்றம்சாட்டி பேசினார்

தன்போது எழுந்தகடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா , இவர் வழமை போன்றே இங்கு பொய்களை கட்டவிழ்த்து விடுகின்றார். இவர்களின் கோஷம் 'ஒரு நாடு இரு தேசம்' என்பது.அதாவது தமது வாக்கு வங்கிக்கு வடக்கு,கிழக்கு. தமது வர்த்தக நடவடிக்கைகளுக்கு தெற்கு என்பதே அதன் அர்த்தம்.

மயிலிட்டி துறைமுகம் தொடர்பில் இங்குக் குறிப்பிடப்பட்டது.மயிலிட்டி துறைமுகத்திற்கு தமிழ் தொழிலாளர்கள் செல்வதனை யாரும் தடுக்க வில்லை. அந்த மக்களுக்குப் பலநாள் படகுகளுக்கான வசதிகளை முன்னரே செய்து கொடுத்திருந்தால் இந்தப்பிரச்சினை வந்திருக்காது. அப்போதைய அரசியல் சூழலில் அது நடக்கவில்லை ஆனால் என்னுடைய காலத்தில் அதனை நான் நிச்சயம் செய்வேன். அந்த பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்றார்.

## 1,500 சிங்கள குடும்பங்களுக்கு வவுனியாவில் காணிக்கு ஏற்பாடு



பிரதேசத்தில் காணிகளை வழங்கும் ஏற்பாடு நடக்கின்றது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பியான செல்வராசா கஜேந்திரன் குற்றஞ்சாட்டினார்.

இந்த திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்துக்கு யு.என்.டி.பி. நிறுவனம் நிதியுதவி செய்கின்றதா?இந்த திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்களுக்கு ஐ.நா. நிறுவனங்கள் துணை புரிகின்றனவா? என கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (11) இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் கடற்தொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் பேசுகையில்,

போரால் அழிக்கப்பட்ட எமது தேசத்தில் விவசாயத்தைக் கட்டி எழுப்ப அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வடக்கு, கிழக்கை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாக பிரகடனப்படுத்தி விசேடமான நிதி ஒதுக்கீடுகள் மூலமும் விசேட சலுகைகளை அறிமுகப்படுத்தியும் விவசாயத்துறை, வர்த்தகத்துறை, கடற்தொழித்துறை, உற்பத்தித்துறையை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். வடக்கு முற்றாக அழிக்கப்பட்டு அந்த மக்களின் பொருளாதாரம் மண்ணோடு மண்ணாக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் வடக்கு, கிழக்கைச் சிங்கள பௌத்த மயமாக்கும் நோக்கோடு திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

உதாரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் வெலிஓயா பகுதியில் தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த கொக்குத்தொடுவாய் மேற்கில் இருக்கக்கூடிய 7 கிராம சேவையாளர் பிரிவுகளில் 1984ஆம் ஆண்டு பலவந்தமாகத் தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்படவில்லை. அவர்களின் இடங்களில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

முந்திரிகைக்குளம், ஆமையன்குளம், அரியகுண்டான் குளம் ,சிலோன் தியேட்டர் உள்ளிட்ட குளங்கள் மிகவும் வளமான விவசாய நிலங்களையுடைய குளங்கள். இந்தப்பகுதிகளில் சிங்களவர் குடியேற்றப்பட்டுள்ளதோடு அந்தப்பகுதிகளைப் போருக்குப் பின்னர் அபிவிருத்தி செய்வதற்கான 7,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. அபிவிருத்திக்காக ஒட்டு மொத்த வடக்கு மாகாணத்திற்கே இந்தளவு நிதி ஒதுக்கப்படவில்லை என்றார்.

## மாணவிகளை தொந்தரவு செய்தால் நடவடிக்கை

பெண் பாடசாலைகள் அமையப் பெற்றுள்ள பிரதேசங்களில் குறிப்பாக உள் வீதிகளில், பாடசாலை ஆரம்பிக்கும் முடியும் நேரங்களில் விசேட போக்குவரத்து பொலிஸாரை சிவில் உடையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இளைஞர்கள் போக்குவரத்து நடைமுறைகளை மீறி உள் வீதிகளில் மோட்டார் சைக்கிள் செலுத்துபவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## "நேரலைக்கு பதிலாக தாமதமாக ஒளிபரப்பவும்"

"பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் சேறு பூசும் அறிக்கைகளை வெளியிடுவதற்கும் முக்கியமற்ற விஷயங்களைப் பேசுவதற்கும் தங்கள் நேரத்தைப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் நீதித்துறை மற்றும் நீதிபதிகள் குறித்து கருத்து தெரிவிக்கப் பாராளுமன்ற சிறப்புரிமைகளைப் பயன்படுத்துகின்றனர். இந்த நடவடிக்கைகளால் பொதுமக்கள் பாராளுமன்றத்தின் மீது நம்பிக்கை இழக்க நேரிடுகிறது," என்றார்.



# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

■ ரஸீன் ரஸ்மின்



சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டுபாயில் இருந்து ஓமன் வந்த, கம்பளை - புஸ்ஸல்லாவ பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய வர்த்தகர் ஒருவர் திங்கட்கிழமை (11) அதிகாலை 03.30 மணியளவில் சலாம் எயார் விமானம் OV-437 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

குறித்த நபரை சோதனையிட்டபோது, அவர் கொண்டு வந்த இரண்டு பயணப் பொதிகளிலிருந்து சுமார் 22 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியான "மென்செஸ்டர்" வகையைச் சேர்ந்த வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 114 சிகரெட் பொதிகளை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் அடிக்கடி வெளிநாட்டு பயணத்தை மேற்கொண்டு வருபவர் என விசாரணையில் தெரியவந்துள்ளதுடன்,

இச்சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வடக்கில் கடலட்டை பண்ணையில்

# “பாரிய நிதி மோசடி”



வடக்கில் கடலட்டை பண்ணையை அமைக்கும் விடயத்தில் பாரிய நிதி மோசடி இடம்பெற்றுள்ளது. இதில் கடற்தொழில் அமைச்சுக்கும் பெரும்பங்கு உள்ளது என தமிழ் தேசியமக்கள் முன்னணியின் பாராளுமன்றம் உறுப்பினரான செல்வராசா கஜேந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (11) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கடற்றொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குற்றம்சாட்டியுள்ளார்.

கடற்றொழில் அமைச்சு வடக்கு, கிழக்கு கடற்றொழிலாளர்களின் வாழ்க்கையை அழித்துக் கொண்டிருக்கின்றது. பாரம்பரிய கடற்றொழில் அழிக்கப்பட்டு கடலட்டை பண்ணைக்கு கப்பம் வாங்கிக்கொண்டு அனுமதியளிக்கப்படுகின்றது. வடக்கில் கடலட்டை பண்ணையை அமைக்க விடயத்தில் பாரிய நிதி மோசடி இடம்பெற்றுள்ளது. கடற்தொழில் அமைச்சுக்கும் பெரும்பங்குண்டு என்றார்.




# கவனயீர்ப்பு போராட்டம்

■ றொசேரியன் லெம்பெட

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் மன்னார் பஜார் பகுதியில் திங்கட்கிழமை (11) காலை 11 மணியளவில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர்.

குறிப்பாக “மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற அரச காணிகள் கொள்ளை தொடர்பாக நீதியை பெற்றுத் தாருங்கள், பல அரச அதிகாரிகளின் ஆசீர்வாதத்துடன் பல மேய்ச்சல் தரைகள், கடற்கரையோரம், காட்டு நிலங்கள் போன்றன பணக்காரர்களுக்காக தாரை வார்க்கப்படுகின்றன. அதனை விரைந்து தடுத்து நிறுத்தவும். மணல் வளம் பல வசதி படைத்தவர்கள் மற்றும் அரச அதிகாரிகளால் சூறையாடப்பட்டு வருகிறது. மேலும் கடல் வளம் முறையற்ற நிலையில் அழிக்கப்பட்டு வருகிறது இந்நிலையில் இந்திய டோலர் படகுகள் எமது மீனவர்களின் வியாபாரத்தைச் சிதைக்கின்றனர்.

கடற்றொழில் அமைச்சானது தெற்கில் மீனவர்களின் வாழ்வாதாரங்கள் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்ற போதிலும் வடக்கு மீனவர்கள் மிகவும் ஒடுக்கப் படுகின்றார்கள்” என குற்றச்சாட்டியுள்ளனர்.

இந்நிலை மாற வேண்டுமெனவும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் உரியத் தீர்வு கிடைக்க வேண்டும் எனவும் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.





# நாடாளாவிய ரீதியில் தபாலக பணிகள் முடங்கின

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

நாடளாவிய ரீதியில் அஞ்சல் தொலைத்தொடர்பு தொழிற் சங்கங்கள் 48 மணி நேர வேலை நிறுத்தத்தை மேற்கொண்டுள்ளன.

திங்கள் (11) மற்றும் செவ்வாய் (12) ஆகிய இரு தினங்களும் பணிப்பகிஷ்கரிப்பு இடம்பெறும் என்று தெரியவந்துள்ளது.

நுவரெலியாவிலும் கண்டியிலும் உள்ள 100 வருடங்களைத் தாண்டிய புராதன தபால் நிலையங்களை விற்பனை செய்ய அரசாங்கம் முடிவெடுத்துள்ளமையை விலக்கிக்கொள்ள வேண்டும் மற்றும் அஞ்சலகப் 20,000 பணியாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கங்களினால் முன்னெடுக்கப்படும் இந்த பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தினால் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து தபால் சேவைகளும் தபாலகத்தினூடாக வழங்கப்படும் இன்னும் பிற சேவைகளும் முடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவ பேருந்தில் மோதி தாயும் மகளும் காயம்



■ செ.கீதாஞ்சன்


முல்லைத்தீவு - சிலாவத்தை வீதியில் இராணுவ பேருந்துடன் மோதி இளம் தாயும் மகளும் படுகாயமடைந்துள்ளனர்.

இவ்விருவரும் சிலாவத்தை பகுதியில் இருந்து உந்துருளியில் ஞாயிற்றுக்கிழமை (10) இரவு பயணித்துக் கொண்டிருந்தபோது வீதியில் நின்ற மாட்டுடன் மோதி, பயணித்துக்கொண்டிருந்த இராணுவ பேருந்துக்குள் சிக்கியுள்ளனர்.

இதன்போது படுகாயமடைந்த சிலாவத்தை பகுதியினை சேர்ந்த தாயும் சிறுமியும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்கள்.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், இராணுவத்தினரின் பேருந்தின் சாரதியினையும் பேருந்தையும் முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர்.

# பெண் யானையின் சடலம் மீட்பு



திருகோணமலை- கிண்ணியாவில் வான்-எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அருனலு குளத்தில் ஞாயிற்றுக்கிழமை (10) மாலை உயிரிழந்த நிலையில் யானையொன்று மீட்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த யானை தொடர்பில் அப்பகுதி விவசாயிகள், வனஜீவராசிகள் திணைக்களத்துக்குத் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து, கந்தளாய் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று யானையின் மரணம் குறித்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கமைய 8 வயது மதிக்கத்தக்க பெண் யானையே இவ்வாறு உயிரிழந்ததாக தெரியவந்துள்ளது.

# மனைவிக்கு ரிங்,ரிங்: மரக்கறி கத்தியால் பதம்பார்த்த கணவன்

மரக்கறிகளை வெட்டும் கத்தியால் தன்னுடைய மனைவியை வெட்டிய கணவனை கைது செய்துள்ள சம்பவம் ஒன்று மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜனஉதானகம வீடமைப்புத் தொகுதியில் இடம்பெற்றுள்ளது.

தன்னுடைய மனைவியின் அலைபேசிக்கு சனிக்கிழமை (10) வந்த அழைப்பு தொடர்பில் சந்தேகமடைந்த கணவன், மனைவியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, மரக்கறிகளை வெட்டும் கத்தியை எடுத்து வெட்டியுள்ளார்.

காயமடைந்த, அப்பெண் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆடைத்தொழிற்சாலையில் சேவையாற்றும் அந்தப் பெண், தன்னுடைய குழந்தைகளைப் பார்வையிடுவதற்காக சம்பவத்தினத்தன்று வீட்டுக்கு வந்து, சமையலறையில் உணவு சமைத்துக்கொண்டிருந்த போது, மனைவியின் அலைபேசிக்கு அழைப்பொன்று வந்துள்ளது.

அது தொடர்பில் மனைவியிடம் கேட்டபோது முன்னுக்குப் பின் முரணாகப் பதிலளித்துள்ளார். இதனையடுத்து கோபமடைந்த கணவன் மனைவியுடன் சண்டையிட்டு, மரக்கறிகளை வெட்டும் கத்தியால் மனைவியின் முகம், நெஞ்சு மற்றும் கைகளை வெட்டியுள்ளார். இதில் படுகாயமடைந்த மனைவி, மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், கைது செய்யப்பட்ட அப்பெண்ணின் கணவன் மொனராகலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நீரில் மூழ்கி இளைஞன் உயிரிழப்பு



நமுனுகுல - பூட்டாவத்த பகுதியில் நீராட சென்ற இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளாக நமுனுகுல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் மொனராகலை, அலியாவத்த பகுதியைச் சேர்ந்த 17 வயதுடையவரென அடையாளம் காணப்பட்டுள்ளார். தமது உறவினர் வீட்டுக்கு சென்றிருந்த இளைஞர், மேலும் இரண்டு இளைஞர்களுடன் அந்த பகுதியிலுள்ள நீரோடையொன்றில் நீராடச் சென்றபோதே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தனி நபரின் வங்கி கணக்கில் இருந்து பணம் திருடப்பட்டது

■ செ.கீதாஞ்சன்

கிளிநொச்சியில் வசித்துவரும் நபர் ஒருவரின் வங்கிக் கணக்கில் இருந்து பணம் திருடப்பட்டுள்ளதாக வங்கியிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

தனியார் வங்கியில் கணக்கு வைத்திருந்த நபர் ஒருவர் அதில் ஒருதொகை பணத்தினை பேணிவந்துள்ளார்.

நீண்டகாலமாகத் தனது வங்கிக் கணக்கினை பராமரிப்பு செய்யாத நிலையில், வங்கியில் போட்ட பணம் அவ்வாறே இருக்கும் என்ற நம்பிக்கையிலும் இருந்துள்ளார்.

இதேவேளை, வங்கியால் கொடுத்த தன்னியக்க அட்டையை (ATM) அவர் பயன்படுத்தாது வீட்டில் வைத்துவந்துள்ள நிலையில், கடந்த 16.08.2023 அன்று வங்கிக் கணக்கினை பார்த்தபோது அதில் தனது வைப்பில் இருந்த 80 ஆயிரம் ரூபாய் பணம் ஒன்லையின் மூலம் இந்த ஆண்டு ஜனவரி மாதம் வங்கி அட்டையைப் பயன்படுத்தி பொருள் கொள்வனவு செய்துள்ளதாக வங்கியால் வாடிக்கையாளருக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வங்கியின் நிபந்தனைகளுக்கு அமைய வாடிக்கையாளர் ஒருவருக்கு வங்கியால் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் பாதிக்கப்பட்ட நபர் இதனை ஏனைய மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இந்த தகவலைத் தெரியப்படுத்தியுள்ளார்.

# பொதுமக்கள் தினம் மீண்டும் ஆரம்பம்

கொவிட் பெருந்தொற்று காரணமாகத் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட பொலிஸ் பொதுமக்கள் நிவாரண தினத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்குப் பதில் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் தீர்மானித்துள்ளார்.

அதற்கிணங்க, எதிர்வரும் 15ஆம் திகதி முதல் பொது விடுமுறை தினங்கள் தவிர்ந்த அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் காலை 9 மணி முதல் பொதுமக்கள் நிவாரண தினம் இடம்பெறும் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தனிப்பட்ட விடயங்கள் தொடர்பாக பொலிஸ் நிலையங்கள் மற்றும் விசாரணை பிரிவுகளில் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள், தீர்வு வழங்கப்படாத அல்லது தேவையற்ற தாமதங்கள் தொடர்பான நியாயமான விடயங்கள் குறித்து பொலிஸ் மா அதிபரிடம் முறையிட முடியும்.

சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளை இணைத்து நடத்தப்படும் இந்த மக்கள் நிவாரண தினத்தின் மூலம், பொதுமக்களுக்கு இலங்கை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தாமதமின்றி நியாயமாகச் சென்றடைய வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபர் பிரதி வெள்ளிக்கிழமைகளில் பொதுமக்கள் நிவாரண தினத்தில் வருகை தருவதற்கு எதிர்பார்ப்பதுடன், பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கு நேரடி பதில்கள் வழங்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# ‘சேனா’வின் படையெடுப்பால் மடியும் மக்காச்சோளம்

இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்த அடைமழை, பெய்யுமென ஒவ்வொருவரும் தங்களுக்குள் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கின்றனர். அந்தளவுக்கு, தற்போது பெய்துகொண்டிருக்கும் அடைமழை, பெரும் சேதங்களை விளைவித்துக்கொண்டிருக்கின்றது. இதனால், விவசாயிகளே கடுமையான பாதிப்புகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

மண்சரிவுகள், மரங்கள் முறிந்துவிழுதல், இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதுடன், வெள்ளம் பெருக்கெடுத்தமையால், தாழ் நிலங்களில், அறுவடைக்குத் தயாராக இருக்கும் விவசாய நிலங்கள் சேறும், சகதியும் கலந்த நிலமாக மாறிவிடுகின்றது. இதனால், விவசாயிகளுக்குக் கடுமையான நட்டம் ஏற்பட்டுள்ளது.

“விவசாயிகள் சேற்றில் கால் வைத்தால் தான் நாங்கள் சோற்றில் கை வைக்க முடியும்” என்பார்கள், ஆனால், காது, மூக்கில் கிடக்கும் நகைகளை அடகுவைத்து, கால்நடைகளை விற்று, கடன்களை வாங்கி, விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு இறுதியில் சொச்சமே கைக்கு வந்து சேரும். இடையில், இயற்கை அனர்த்தங்கள், முழு விவசாயத்தையும் அழித்து விடுகின்றன.

வடக்கு, கிழக்கில் காட்டு யானைகள் வயல்களை மட்டுமன்றி, பயன்தரும் மரங்களைத் துவம்சம் செய்துவிடுகின்றன. குடியிருப்புகளையும் இடித்தழித்து, களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் நெல் மூடைகளையும் பிய்த்தெறிந்து உண்டுவிடுகின்றன.

காட்டுயானை, குரங்குகள், மயில் உள்ளிட்ட பறவை இனங்கள் சாப்பிட்டதன் பின்னர் எஞ்சியிருப்பதே, விவசாயிகளுக்கு எஞ்சுகின்றன. அவற்றுக்காக கிடைக்கும் பெறுமதி சொற்பமாகும். இதனால், கடனில் இருந்து மீண்டெழ முடியாத விவசாயிகளில் பலர், தவறான முடிவுகளை எடுத்திருந்தனர்.

ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள், விவசாயிகள் தொடர்பில் ஆக்கப்பூர்வமான சலுகைகளை வழங்குவதில்லை என்ற குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன. இதனால், விவசாயிகளில் பலர், விவசாயத்தை முற்றாக கைவிட்டுவிட்டு, வேறு தொழில்களுக்குச் சென்று விடுகின்றனர்.

இரசாயன பசளைக்குத் தடைவிதித்து, சேதனை பயன்பாட்டை உடனடியாக அமுல்படுத்தியமையால், உரிய விளைச்சலை ஈட்டமுடியாத நிலைமையும் ஏற்பட்டது. இதனிடையே, பூச்சுகள், கம்பளிப்பூச்சிகள், வெட்டுக்கிளிகள் மற்றும் சேனா உள்ளிட்டவை பயிர்களை அழித்துவிடுகின்றன.

இதில், ‘சேனா’ மக்காச்சேளத்துக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதனால், சோள விவசாயிகள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். சோள அறுவடை பாதிக்குமாயின், திரிபோஷா உற்பத்தி பாதிக்கும், குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும் திரிபோஷாவை முறையாக விநியோகிக்க முடியாத நிலைமை ஏற்படும். இது போஷாக்கு மட்டத்தில் தாக்கத்தைச் செலுத்தும்.

கோழிப் பண்ணைகளுக்கு சோளத்தைத் தீவனமாகப் பெறமுடியாது. கோழி முட்டைகளுக்கும் கோழி இறைச்சிக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்படும், உள்ளூர் சந்தைகளில் இவற்றின் விலை வானத்தை முட்டிக்கொண்டு நிற்கும்.

மக்காச்சோள நடவுக்கு முன்னர், விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும், விவசாயிகள் முகங்கொடுக்கும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், சேனாவை அழிப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை போதுமானதாக இருந்திருக்காது. அதனால்தான், கடுமையான தாக்கத்தை செலுத்துகின்றது.

எவ்வாறெனினும், சேனாவை முற்றாக அழித்தொழிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் பெரும் பாதிப்பை சந்திக்கவேண்டும்.


# தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# அவர்கள் மட்டும்தான் குற்றவாளிகளா?

மொஹமட் பாதுஷா

நாட்டில் ஏற்படுகின்ற சிறிய, பெரிய பிரச்சினைகள், நெருக்கடிகளுக்காக நாம் ஆட்சிக் கட்டமைப்பையே குற்றம் சொல்கின்றோம். ஆட்சியாளர்களும் அந்தந்தக் காலத்தில் அதிகாரத்தில் உள்ள அரசியல்வாதிகளும் உயர் பதவியிலுள்ள அதிகாரிகளுமே பெரும்பாலும் விமர்சனங்களின் மையப் புள்ளியாக இருப்பதைக் காண்கின்றோம்.

இதில் எந்தத் தவறும் இல்லை! அவர்கள்தான் பெரும்பாலான குழப்பங்களுக்கும் நாடு இந்த நிலைமைக்குப் போவதற்கும் வழிகோலியவர்கள் என்பது மறுக்க முடியாத நிலைப்பாடாகும். ஆயினும், அவர்கள் மட்டும்தான் குற்றவாளிகளா, சமூக மட்டத்தில் ஏனைய துறைகளில் நடக்கின்ற தவறு செய்பவர்களும் இதற்குக் காரணம் இல்லையா என்பதைச் சிந்திக்க வேண்டியுள்ளது.

இந்த பாராளுமன்ற உறுப்பினர்களையும் அரசாங்கங்களையும் தெரிவு செய்கின்றவர்கள் என்ற வகையில் வெளிப்படையான ஒரு பொறுப்புக்கூறலை நாட்டு மக்கள் எல்லோருமே சுமந்து நிற்கின்றார்கள். ஆனால், நாட்டில் உண்மையான, ஆக்கப்பூர்வமான மாற்றமொன்று தேவை என்றால் அந்த மாற்றம் அடிமட்ட, நடுத்தர சமூக நிறுவன கட்டமைப்புக்களில் இருந்து தொடங்க வேண்டும்.

ஏனெனில், குற்றம், ஊழல், சமூகத் துரோகம், மக்களை ஏய்த்துப் பிழைத்தல் என்ற படுபாதகச் செயல்களை அரசியல்வாதிகள் மட்டுமன்றி, சாதாரண அரச ஊழியர்கள், தனியார்த்துறையினர். சமூக நிறுவனங்கள், பொறுப்பு வாய்ந்தவர்கள், வியாபாரிகள் என்ற எல்லா வகைக்குள் உள்ளடங்கும் சிலரும் செய்து கொண்டுதான் இருக்கின்றார்கள். இது நாம் கவனிக்கத் தவறிய, பேசத் தவறிய ஒரு நிதர்சனமாகும்.

ஆகவே, ராஜபக்ஷக்களை அல்லது குறிப்பிட்ட சில அரசியல்வாதிகளை நாம் கள்வர்கள் என்கின்றோம். நாட்டைக் கொள்ளையடித்தவர்கள் என்கின்றோம். சமூகத்தைச் சீரழித்தவர்கள் என்றும், பொருளாதார, சமூகப் பின்னடைவுகளின் காரணகர்த்தாக்கள் என்றும் இன்னும் சிலரை அடையாளப்படுத்துகின்றோம். அப்படியாயின், கீழ் மட்டத்தில் உள்ள எல்லோரும் தூய்மையானவர்கள்தானா?

அரச துறை, தனியார்த்துறை, அலுவலகங்கள், வியாபார நிறுவனங்கள், சமூக மட்டத்திலான கட்டமைப்புக்களில் எல்லா விதமான மோசடிகளும், கேடுகெட்ட காரியங்களும் இடம்பெற்றுக் கொண்டிருப்பதை ஒவ்வொரு பொதுமகனும் கவனிக்க வேண்டியுள்ளது. தனிமனிதன், பிறகு ஊர், பின்னர் நாடு ஒரு சிறந்த மாற்றத்தை உள்வாங்குவதற்கு இது உதவும்.

அரசியல்வாதிகள் ஊழல் செய்வது ஒருபுறமிருக்க அவர்களுடன் இருக்கின்ற அல்லக்கைகள் அவர்களது பெயரைச் சொல்லிப் பல ஜில்மால் வேலைகளைப் பார்க்கின்றனர். தொழில் தருவதாகக் கூறி பணத்தைச் சுருட்டுகின்றனர்.

அரச அதிகாரிகள் பலர் தமது பணிகளை வினைத்திறனாக மேற்கொள்கின்றார்களா என்பது கேள்விக்குரியது. சில அரச அதிகாரிகள் தரகுப் பணத்தில் குறியாக இருப்பதாக ஏராளமான கதைகள் உள்ளன. சில அரச நிறுவனங்களில் வேலை நேரத்தை சில ஊழியர்கள் சுரண்டுகின்றார்கள். மக்கள் அலைக்கழிக்கப்படுகின்றார்கள். தமக்கு இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்திப் பல ஊழல்களைச் செய்கின்ற அரச அதிகாரிகள் கிட்டத்தட்ட ஒவ்வொரு ஊரிலும் இருக்கின்றார்கள்.

இன்று பிரத்தியேக வகுப்புக்கள் பெரிய வர்த்தகமாக ஒரு மாபியாவாக மாறியிருக்கின்றது. கணிசமான ஆசிரியர்கள் தாங்கள் பெறுகின்ற சம்பளத்திற்காகப் பாடசாலைகளில் மன சாட்சியுடன் முழுமையாகக் கற்பித்தலை மேற்கொள்ளாமல், பிரத்தியேக வகுப்புகளின் ஊடாக பணம் உழைக்கும் நோக்கில், மாணவர்களை அங்கு வரவழைக்கின்ற நிலை உள்ளது.

இதுவெல்லாம் ஏதோ ஒரு வகையான கனவு இல்லையா? இவையெல்லாம் மாற்றப்பட வேண்டியதில்லையா?

நாம் பெரும்பாலும் பால்மா, சீனி, பருப்பு, எரிவாயு விலைகளைப் பற்றியே கூடுதல் கவனம் செலுத்துகின்றோம். ஆனால், நாம் அன்றாடம் கொள்வனவு செய்கின்ற எல்லாப் பொருட்களின் விலைகளும் பன்மடங்காக அதிகரித்துள்ளன. குறிப்பாக பலதேசிய கம்பனிகள் விலைகளை தம் விருப்பப்படி அதிகரித்துள்ளன. அதுபோதாது என்று பிரதேச ரீதியாக உள்ள மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகள் தமக்கு விரும்பியவாறு எல்லாப் பொருட்களின் விலைகளையும் அதிகரித்து பகற்கொள்ளை அடிப்பதைக் காண்கின்றோம்.

ஆனால், மக்கள் குறிப்பிட்ட வர்த்தக நிலையங்களை அல்லது உற்பத்திகளைப் புறக்கணிக்கவோ அதற்கெதிராக போராடவோ இல்லை. அரசாங்கம் கூட இந்தப் பொருட்களுக்கு ஒரு மிதமான விலையைப் பேண நடவடிக்கை எடுத்த வரலாறே கிடையாது. இது குறித்து யாரும் சிந்தித்ததுண்டா?

பொதுவாக நாட்டிலும் குறிப்பாக முஸ்லிம், தமிழ் பிரதேசங்களிலும் போதைப் பொருள் வியாபாரம் கொடிகட்டிப் பறக்கின்றது. இது பாடசாலை மாணவர்களுக்குள் ஊடுருவிட்டது என்பதே நிதர்சனமாகும். இதுபோன்ற முறைகேடான வர்த்தகத்தின் ஊடாக ஒவ்வொரு ஊரிலும் திடீர் பணக்காரர்கள் உருவாகியுள்ளார்கள்.

இது குறித்த தகவல்கள் பொலிஸாருக்கோ பாதுகாப்பு தரப்புக்கோ தெரியாதிருக்கும் என்ற சொல்ல முடியாது. ஆனால், அகப்படும் போதை வியாபாரிகளில் பலர் சில நாட்களில் வெளியில் வந்து விடுவதான ஒரு குற்றச்சாட்டுப் பரவலாக இருக்கின்றது.

ஏன் பாதுகாப்புத் தரப்பில் சிலரது ஆதரவு அல்லது அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பின்றி இந்த வியாபாரத்தை இவ்வாறு நடத்த முடியாது என்ற விடயம் நாடாளுமன்றத்தில் கூட பேசப்பட்டு விட்டது. ஆனால், சில உண்மையான பாதுகாப்பு அதிகாரிகள் முயற்சி செய்தாலும் கூட, அதனையும் மீறி சிலரது ஒத்துழைப்புடன் இவ்வாறான வியாபாரங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. ஏன் சட்ட விரோத வியாபாரங்களில் அரசியல்வாதிகள் கூட ஈடுபடுவதாகப் பல கதைகள் உள்ளன.

அரச கட்டமைப்பில் தமது வேலைகளை முடிப்பதற்காகப் பல இடங்களில் ஏதாவது கைமாறு கொடுக்க வேண்டிய நிலை இன்னுமுள்ளது. இவ்வாறு அதிகம் கொடுப்பவர்களின் கோப்புகள்தான் வெற்றி பெறுகின்றன. அப்படியென்றால் இதுவெல்லாம் பெரும் குற்றமில்லையா? இதனை நீதிக் கட்டமைப்போ அல்லது சமூக மட்டத்தில் உள்ள நிறுவனங்களோ தட்டிக்கேட்டதுண்டா? இல்லை. மாறாக, அவ்வாறானவர்களிடம் இருந்து ஒரு தொகை நன்கொடை கிடைத்தால் அவர்கள் சமூகத்தில் ‘புனிதமானவர்களாக’ ஆகி விடுவதைக் காண்கின்றோம்.

சமூகச் சீரழிவுகள் அதிகரித்துச் செல்கின்றன. ஒரு தந்தை தனது மகளையே தாயாக்குகின்றார். அண்ணன் தங்கையை துஷ்பிரயோகப் படுத்துகின்றான். ஆசிரியர் மாணவிகளை வீடியோ எடுக்கின்றார். பாலியல் சீண்டல் செய்கின்றார் என பல செய்திகளைப் பார்க்கின்றோம் ஆனால், மனிதக் குலத்திற்கு எதிரான இந்தக் குற்றங்களுக்காக நாம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

ஒரு மதப் பாடசாலைக்கு அல்லது தர்மப் பாடசாலைக்குச் செல்கின்ற சிறுவன் துஷ்பிரயோகப்படுத்தப்படுகின்ற, அடித்துத் துன்புறுத்தப்படுகின்ற, அங்கேயே அவன் மரணிக்கக் கூடிய சூழல் ஏற்பட்டு வருவதை நாமறிவோம். ஆனால், இந்தக் கள்வர்கள் இனிமேலும் உருவாகாமல் விடுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

வெளிநாட்டு மோகத்தால் இலட்சக்கணக்கான பணத்தைக் கொடுக்க ஒரு கூட்டம் தயாராக இருக்கின்றது. கோடிக்கணக்கான பணத்தை வாங்கிக் கொண்டு பல தரகர்கள் ஏமாற்றியுள்ளனர். மறுபுறத்தில், ஐரோப்பிய நாடுகளில் நமது மக்கள் தமக்கு அடைக்கலம், நிரந்தர குடியுரிமை கிடைப்பதற்கான பொய்யான தகவல்களை, ஆவணங்களை வழங்குவதை நாம் ஒருபோதும் ஒரு களவாக, மோசடியாகப் பார்ப்பதில்லை.

அரசாங்கம் மாற வேண்டும், ஆட்சிக் கட்டமைப்பில் முறைமை சார்ந்த மாற்றம் உருவாக வேண்டும். இலங்கையின் அரசியல் கலாசாரம் பண்புசார் மாற்றம் வர வேண்டும். கள்வர்கள், கொள்ளையர்கள், மோசடி அரசியல்வாதிகள் மற்றும் ஊழல் அதிகாரிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் நினைக்கின்றார்கள் என்பதை யாரும் மறுக்கவில்லை.

ஆனால், இந்த வேண்டுதலை மட்டும் வைத்துக் கொண்டு குற்றவாளிகள், கள்வர்களை தண்டிக்கும் விடயத்தில் நாம், ஒரு சமூகமாக, ஒரு நாடாக வாழாவிருக்கின்றோம். நமக்குள் நடக்கின்ற தவறுகளைக் கண்டுகொள்ளாமல் வெளியில் உள்ள கள்வர்களைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கின்றோம். மாற்றம் எங்கிருந்து உருவாக வேண்டும் என்பதை நாம் ஆக்கப்பூர்வமாகச் சிந்திக்கத் தவறி விடுகின்றோம்.

இப்படி நாட்டில் மேல் மட்டத்தில் மட்டுமன்றி, ஏனைய எல்லா மட்டங்களிலும் சிறிய பெரிய ஊழல்கள், குழப்பங்கள், குற்றங்கள், மோசடிகள் இடம்பெற்றுக்கொண்டே இருக்கின்றன. அதனை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். ஆனால், நாம் நமக்குத் தேவையானதை மட்டுமே பேசுகின்றோம். பல விடயங்களைக் கண்டுகொள்வதே இல்லை.

மதுபானம் அருந்துவது கூடாது என்று மக்களுக்குப் போதித்துக் கொண்டு மதுக்கடைகளுக்கு அனுமதி வழங்கும் அரசாங்கம் போல, சிகரெட் புகைத்தால் புற்றுநோய் வரும் என்ற வசனத்தைப் பார்த்துக் கொண்டே புகைக்கும் கண்மூடித்தனமான இளைஞனைப் போல, நமது செயற்பாடுகள் உள்ளன.

இதுபற்றியெல்லாம் சிந்திக்காது, பேசாது, செயற்படாது நாட்டில் மாற்றம் என்பது மேலிருந்து கீழ்நோக்கியே இடம்பெற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம். ஆனால் உண்மையிலேயே மாற்றம் கீழிருந்து மேல் நோக்கியும் நகர்த்தப்பட வேண்டும். அதைவிடுத்து, அரசாங்கம், ஆட்சியாளர்கள், எம்.பி.க்கள் மாறுவதால் மட்டும் கீழ்மட்டத்தில் உள்ள கள்வர்கள் எல்லோரும் திருந்திவிடுவார்கள். இலங்கையில் மக்கள் நினைக்கும் மாற்றம் ஏற்பட்டு விடும் என நினைத்தால் அது வெறும் கற்பனையாகவே இருக்கும்.



## வாழ்வியல் தரிசனம்

கனவு நிலை அழிந்து போய்விடும். நனவு நிலையே இயற்கையான உண்மை நிலை. கனவுகளில் மட்டும் வாழ முடியாது.

பல அறிஞர்கள் தங்கள் எண்ணங்களை நிஜமாக்கினார்கள். அவை அவர்களின் அறிவினாலும் தொடர் முயற்சியாலும் நிறைவேறின. ஆனால் எந்த முயற்சியையும் செய்யாது, கனவுகளை மட்டும் நம்பி வாழ்பவர்களை என்ன செய்வது?

நிழல் எப்படி நிஜமாகும்? எங்களின் நிழல்கூட சிறிது அசைந்தால் மாறிவிடுகின்றது. இருட்டில் ஏது நிழல்? ஒவ்வொரு நாளும் பற்பல கனவுகள், போகாத இடங்களில் பயணம் செய்து சுற்றித் திரிகின்றது.

உண்மையில் மனிதன் வாழவேண்டும். இடையிடையே தோன்றி, மறையும் காட்சிகளில் மயங்கக்கூடாது. இதுவும் ஒரு மாயநிலை.

தேவையற்ற நினைவுகளைத் தூக்கித் தூக்கி எறிக. அதிகமாக ஆசைப்படக் கூடாது. உங்களை நீங்கள் நம்பாமல் எதுவுமே முழுமையாகாது. நிஜவாழ்க்கையில் புகுவதே சுலபமான முன்னேற்றம்.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அக்குறணையை கவனிப்பீர்களா?

அடைமழை காரணமாக அக்குறனை நகரமும், அதனை அண்மித்த பகுதிகளிலும் சுமார் மூன்று அடி உயரம்வரை வெள்ளம் சூழ்ந்துகொள்கின்றது.

வர்த்தக நிலையங்களுக்குள் வெள்ளநீர் புகுந்துகொள்வதுடன், அக்குறனை நகரினூடாக கண்டி - மாத்தளை செல்லும் பிரதான வீதியும், வெள்ளக்காடாகி விடுவதால், வாகனப் போக்குவரத்தும் தடைப்படுகின்றன.

வெள்ள அனர்த்தம் காரணமாக சுமார் ஐந்து கோடி ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டதாகவும் வர்த்தகர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அக்குறனை நகர வீதியோடு செல்லும் பிங்கா ஓயாவும் பெருக்கெடுக்கின்றது. அக்குறனை நகரில் இடப்பற்றாக்குறை காரணமாக, கழிவுநீர் வழிந்தோடும் கான்களில், கொங்கிரீட் தரைகள் அதிகம் அமைக்கப்பட்டிருப்பதால் இந்நிலைமை ஏற்படுவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றன.

எனினும் கடந்தகால வெள்ள அனர்த்தம் பற்றியும் இதனைத் தடுப்பது சம்மந்தமான அக்குறனையின் மஸ்ஜித் நிர்வாகம் சமூக மற்றும் சிவில் அமைப்புக்களது கலந்துரையாடல்கள் கடந்த காலங்களில் நடத்தப்பட்டதுடன், வெள்ள அனர்த்தம் ஏற்படாமைக்கான தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்வது குறித்து அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் அறிய முடிகிறது.


ஆகையால், அடைமழையின் போது, அக்குறனை நகரம் வெள்ளத்தில் மூழ்காமல் இருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை உரிய தரப்பினர் எடுக்கவேண்டுமென, நகர வர்த்தகர்களும், நலன் விரும்பிகளும் கோரிக்கை விடுக்கின்றனர்.

– ஏ.எம்.ஜலீல்

# உதிர்ந்த இரண்டு இலக்கிய நட்சத்திரங்கள்

## மாத்தளை எழுத்தாளர்கள் அனுதாபம்






மலையகத்தின் மீது அக்கறையும் அனுதாபமும் கொண்ட வடப்புலத்து எழுத்தாளர்கள் நிறையவே இருந்திருக்கின்றார்கள். மலையகத்தில் ஆசிரியர்களாகவும், மருத்துவர்களாகவும், எழுதுவினைஞர்களாகவும் திகழ்ந்தவர்கள் மலையகம் குறித்து இலக்கியங்களை படைத்து தந்திருக்கிறார்கள். அந்த அணியில் மலையகத்தில் கல்வி கற்பித்த காலத்தில் நல்லாசிரியனாகவும் மலையக மாணவர்களை உயர்த்த கல்வித்துறையில் ஊக்குவித்த செயற்பாட்டாளராகவும் மலையக இலக்கியம் மீது தனது இறுதி மூச்சு வரை பெரும் அபிமானம் கொண்டிருந்தவருமான, மலையக மண்ணை புகுந்த இடமாக கருதாமல் பிறந்த இடமாக கருதிய பண்பாளருமாகிய பேராசிரியர் செ.யோகராஜா அவர்களின் மறைவிற்கு மலையக எழுத்தாளர்கள் சார்பிலும் மலையக மக்கள் சார்பிலும் மலையகம் தனது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறது.

மாத்தளை மாவட்ட தமிழர்களின் வாழ்வும் பாரம்பரியமும், மாத்தளை மாவட்ட முஸ்லிம்களின் வரலாறும் பாரம்பரியமும் உட்பட பல வரலாற்று ஆய்வு நூல்களை எழுதிய அறிஞர் மர்ஹூம் ஏ.ஏ.எம்.புவாஜி அவர்கள் மாத்தளையில் தமிழ் முஸ்லிம் சமூகங்களின் ஒருமைப்பாடு குறித்து சிந்தித்த பெருமகனாவார். எளிமையும் உயர்ந்த பண்பும் வயதிற்கு மூத்தோர் அனைவரையும் மதித்துப் போற்றும் பாங்கும் பகைவர்களுக்கு அருளும் நல்நெஞ்சும் பேராசான் புவாஜி அவர்களின் உன்னதக் குணங்களாகும். மாத்தளையில் அவர் ஏற்றி வைத்த இலக்கியச்சுடர் அணையாது என்றும் ஒளிவீசிக் கொண்டிருக்கும்.

இந்த 2023ஆம் ஆண்டு இறுதியில் இரண்டு இலக்கிய நட்சத்திரங்கள் உதிர்ந்து போய் விட்டமை ஈழத்து இலக்கிய உலகிற்கு ஏற்பட்ட பெரும் துயரம் என்று மறைந்த இரண்டு தமிழ் அறிஞர்களான பேராசிரியர் செல்லையா யோகராஜா, கல்விமான், பன்னூலாசிரியர் மர்ஹூம் ஏ.ஏ.எம்.புவாஜி அவர்களின் மறைவுக் குறித்து மாத்தளை எழுத்தாளர்களான மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலன் மற்றும் எச்.எச். விக்ரமசிங்க ஆகிய மூவரும் கூட்டாக இணைந்து மறைந்த இருவரது ஆத்ம சாந்திக்காக தங்களின் அனுதாப அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.



# இலங்கையில் தொடரும் இன அழிப்பு

"1987இல் மேற்கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி, மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டால்தான் தமிழர்களின் நிலம், வழிபாட்டுத் தலங்கள் அபகரிப்பு போன்றவற்றை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும் என்று அங்குள்ள தமிழர் தலைவர்கள் கோருகின்றனர்."

இலங்கை 1948இல் சுதந்திரம் பெற்றதிலிருந்தே தொடர்ச்சியாக அமைந்த அரசுகள், சிறுபான்மையினரான தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் மக்கள்தொகை விகிதாசாரத்தை மாற்றும் வகையில் அவர்களது இடங்களைக் கைப்பற்றுவதற்கான திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டு வந்திருக்கின்றன.

1980களில் விடுதலைப் புலிகளின் எழுச்சிக்குப் பிறகு சுமார் 30 ஆண்டுகள் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் அரசின் கட்டுப்பாட்டில் இல்லாமல் போனது. 2009இல் இறுதிப் போர் நடந்து விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னர், இனியாவது அமைதியான வாழ்க்கை வாழ வாய்ப்பு கிடைக்கும் என்ற தமிழர்களின் கனவு கடந்த 14 ஆண்டுகளாகக் கொஞ்சம் கொஞ்சமாகச் சிதைந்து வருகிறது.

2009க்கு முன்னர், சூழ்நிலை காரணமாக உலகின் பல பகுதிகளுக்கும் இலங்கையின் வேறு பகுதிகளுக்கும் இடம்பெயர்ந்த தமிழர்கள் தங்களது பகுதிகளுக்குத் திரும்பியபோது அவர்களது இடங்களில் இராணுவத்தின் உதவியோடு சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டிருந்தனர்.

மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கிவிடக் கூடாது என்பதைக் காரணம் காட்டி, தமிழர்கள் வாழும் பகுதிகளில் பொதுமக்கள் ஐந்து பேருக்கு ஒரு வீரர் என இராணுவத்தினர் பெரும் அளவில் குவிக்கப்பட்டு ஒருவிதமான அச்ச உணர்விலேயே தமிழர்கள் வாழும் சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

மற்றொரு புறம் தமிழர்களின் கோயில்கள் அமைந்துள்ள இடங்கள் வரலாற்று ரீதியாகப் பௌத்தர்களுடையது என்பதை நிறுவுவதற்கான முயற்சிகள் வேகமெடுத்தமை தமிழர்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

முல்லைத்தீவில் உள்ள குருந்தூர்மலை கோயிலில் சிவபெருமானை ஆதி அய்யனாராகக் கருதி அங்கு அமைக்கப்பட்டிருந்த திரிசூலத்தை தமிழர்கள் வழிபட்டு வந்தனர். அந்த இடத்தில் ஒரு காலத்தில் புத்த விகாரை இருந்தது எனக் கூறி புத்தர் சிலையை நிறுவ புத்த பிக்குகள் தலைமையில் சிலர் 2018இல் முயற்சி மேற்கொண்டபோது உள்ளூர் மக்கள் கடுமையாக எதிர்த்தனர். இதையடுத்து, தொல்லியல் துறை அகழாய்வுக்கு கோட்டாபய அரசு உத்தரவிட்டது. தமிழர்கள் நீதிமன்றத்தை நாடினர். முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவையும் மீறி அமைச்சர் விதுர விக்ரமநாயக தலைமையில் அங்கு கடந்த 2022, பெப்ரவரியில் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. அங்கு அமைக்கப்பட்ட புத்த விகாரை 2022 ஜூனில் திறக்கப்பட்டது. அங்கு சிங்களர்கள் வழிபாடு நடத்த அனுமதி அளிக்கப்படுகிறது. பல்வேறு கட்டுப்பாடுகள் மூலம் தமிழர்களுக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டது.

வவுனியா வடக்கு மாவட்டம், ஒலுமடு என்ற இடத்தில் வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் விக்கிரங்கள் கடந்த ஏப்ரல் மாதம் மர்ம நபர்களால் சேதப்படுத்தப்பட்டன. வவுனியா நீதிமன்றத்தின் உத்தரவுக்குப் பிறகு மே மாத தொடக்கத்தில் அந்த இடத்தில் விக்ரகங்கள் மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

திருகோணமலையிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள கன்னியா வெந்நீரூற்று பகுதியைத் தமிழர்கள் புனிதமாகக் கருதுகின்றனர். அங்கிருந்த விநாயகர் கோயில் இடிக்கப்பட்டு அருகில் புத்த விகாரை நிறுவப்பட்டுள்ளது. இந்த இடத்தில் இராவணன் தனது தாயாருக்கு இறுதிச் சடங்குகள் செய்ததாகத் தமிழர்களால் நம்பப்படுகிறது.

கச்சத்தீவில் கூட அங்கு பாதுகாப்புப் பணியில் இருக்கும் இலங்கைக் கடற்படையினர் வழிபட என்று கூறி கடந்த மார்ச் மாதம் இரண்டு சிறிய புத்தர் சிலைகள் நிறுவப்பட்டன. கோட்டாபய ஜனாதிபதியாக இருந்தபோது தொல்லியல் பாரம்பரிய மேலாண்மைக்கு என சிறப்புக் குழுவை கடந்த 2020இல் அமைத்தார். தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் பாதுகாப்பு வாய்ந்த இடங்களை மீட்கவும், பாதுகாக்கவும் அமைக்கப்பட்ட இந்தக் குழுவில் முழுக்க புத்த பிக்குகள், இராணுவ உயர் அதிகாரிகள் என சிங்களவர்களே இடம்பெற்றிருந்தனர்.

அம்பாறையில் 246, திருகோணமலையில் 74, மட்டக்களப்புயில் 55 இடங்கள் மற்றும் இந்த இடங்களைச் சுற்றி உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைப் பாரம்பரிய பகுதிகளாக இந்தக் குழு அடையாளம் கண்டுள்ளது.


இந்தக் குழு அமைக்கப்பட்ட பின்னர், திருகோணமலையில் ஒரு சதவீதத்துக்கும் குறைவாக சிங்களர்கள் வசிக்கும் பகுதிகளில் 20க்கும் மேற்பட்ட பௌத்த வழிபாட்டுத் தலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.


சிங்களவர்களைக் குடியமர்த்துதல், இராணுவத்தினர் குவிப்பு, வழிபாட்டுத் தலங்களைக் குறிவைத்தல் என திட்டமிட்ட ரீதியில் தமிழர்களுக்கு சொல்லொணா துயரை புத்த பிக்குகளின் ஆதரவுடன் இலங்கை அரசு அளித்து வருகிறது. இது தொடர்ந்தால் மீண்டும் இலங்கையில் போராட்டங்கள் பெரிய அளவில் ஏற்பட்டு வன்முறையாக மாறக்கூடிய அபாயம் உள்ளது.

1987இல் மேற்கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி, மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டால்தான் தமிழர்களின் நிலம், வழிபாட்டுத் தலங்கள் அபகரிப்பு போன்றவற்றை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும் என்று அங்குள்ள தமிழர் தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

கொரோனா காலகட்டத்தில் உணவு, எரிபொருள் தட்டுப்பாடு போன்றவற்றால் திவால் நிலைக்கு தள்ளப்பட்டபோது இந்தியா உதவிக் கரம் நீட்டியதால்தான் இலங்கையால் மீண்டு வர முடிந்தது. இப்போதும்கூட அங்கு தமிழர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் பணிக்கு இந்திய அரசு உதவி வருகிறது. இந்தப் பின்னணியில், இந்திய அரசு தலையிட்டு இலங்கையில் தமிழர்களின் அமைதியான வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்க உரிய தீர்வு காண வேண்டியது வரலாற்றுத் தேவையாகும்.

நன்றி- தினமணி







நடிகர் அருண் பாண்டியனின் மகளான கீர்த்தி பாண்டியன், நடிகர் அசோக் செல்வனை அண்மையில் திருமணம் செய்து கொண்டார். அசோக் செல்வனின் 'சபாநாயகன்' படமும், கீர்த்தி பாண்டியன் நடித்துள்ள 'கண்ணகி' படமும் விரைவில் வெளியாக இருக்கிறது.

இந்த நிலையில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற கீர்த்தி பாண்டியன், "திருமணத்துக்கு பிறகு 2 பேருமே நடிப்பில் பிசியாகி விட்டோம். இப்போது நாங்கள் இருவரும் வீட்டுக்குள் இணைந்திருக்கும் நாட்கள் எத்தனை? என்று எண்ணி கொண்டிருக்கிறோம். அந்தளவு பட வேலையில் பிசியாக இருக்கிறோம். என்னை பற்றி நன்றாக புரிந்துகொண்டவர் அசோக். அதேவேளை, எனக்கான மரியாதையும் அவர் தருகிறார். நடிப்பு சம்பந்தமாக எங்களுக்குள் இருக்கும் கருத்துகளை தைரியமாகவே பகிர்ந்துகொள்வோம்.

உடல் தோற்றத்தை பற்றி விமர்சிப்பது தவறு.

அப்படி பேசுவோரின் தரமற்ற எண்ணத்தை தான் இது வெளிக்காட்டுகிறது. சிறிய வயதில் எனது தோற்றத்துக்காக நிறைய கலாய்க்கப்பட்டு இருக்கிறேன். நான் குள்ளமாக, ஒல்லியாக இருந்தேன். இன்னொன்று, நான் மிகவும் கருப்பாக இருந்தேன்.

# உடல் தோற்றத்தை விமர்சிப்பது தவறு



# இமயமலையில் 14 நாட்கள் நிர்வாணமாக வாழ்ந்த நடிகர்

பாலிவுட்டில் முன்னணி நடிகராக வலம்வருபவர் வித்யுத் ஜமால். இவர் பில்லா 2, அஞ்சான் போன்ற தமிழ் படங்களிலும் நடித்துள்ளார். இந்த நிலையில், தனது இன்ஸ்டாகிராமில் வெளியிட்டு இருக்கும் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகின்றன.

இமய மலை தொடர்களில் ஒருவார காலம் தான் வாழ்ந்த வாழ்க்கையை விவரிக்கும் வகையில், மூன்று புகைப்படங்களையும் ஏன் இப்படி ஒரு வாழ்க்கை முறையை பின்பற்றுகிறார் என்பது பற்றியும் வித்யுத் ஜம்வால் விளக்கம் அளித்து இருக்கிறார்.

14 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பித்த வழக்கப்படி ஒவ்வொரு ஆண்டும் 7 முதல் 10 நாட்கள் வரை வித்யுத் ஜம்வால் யார் உதவியும் இன்றி தனியாக வாழ்ந்து வருகிறார். ஆடம்பர வாழ்க்கையை தவிர்த்து காட்டு பகுதியில் யார் உதவியும் இன்றி இயற்கையுடன் ஒன்றி இருக்கும் வகையில், வித்யுத் ஜம்வால் ஏழு முதல் பத்து நாட்கள் வரை காட்டு பகுதியில் தனது உடலில் ஆடை எதுவும் இன்றி நிர்வாணமாக கழித்து வருகிறார்.



# வெங்கட்பிரபுவுடன் இணைந்த தனுஷ்

இயக்குநர் வெங்கட் பிரபு தற்போது விஜய் நடித்து வரும் 'தளபதி 68' திரைப்படத்தை இயக்கி வரும் நிலையில், அவர் தயாரிக்கும் திரைப்படத்தில் தனுஷ் இணைந்துள்ளார்.

இயக்குநர் வெங்கட் பிரபு தயாரிப்பில் உருவாகி வரும் திரைப்படம் 'நண்பன் ஒருவன் வந்த பிறகு'. இந்த படத்தில் நடிகரும் வெங்கட் பிரபுவுக்கு நெருக்கமானவருமான ஆனந்த் இயக்கி வருகிறார்.

இந்த படத்தில் லீலா, குமாரவேல், விசாலினி, ஐஸ்வர்யா, ஆனந்த், பவானி ஸ்ரீ, ஆர்ஜே விஜய், கேபிஒய் பாலா, ஆர்ஜே ஆனந்தி உட்பட பலர் நடித்து வருகின்றனர். இந்த படத்தில் ஒரு முக்கிய கேரக்டரில் வெங்கட்பிரபுவும் நடித்து வருகிறார்.

இந்த படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில், இந்த படத்தில் ஒரு பாடலை தனுஷ் பாடியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இயக்குநர் ஆனந்த் தனது சமூக வலைத்தளத்தில் தங்களது படத்திற்கு ஒரு பாடலை பாடி கொடுத்த தனுஷ் அவர்களுக்கு நன்றி என நெகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.

மேலும், தனுஷுடன் எடுத்துக் கொண்ட புகைப்படத்தையும் பதிவு செய்துள்ள நிலையில் அந்த புகைப்படம் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# 'ஆலம்பனா' படத்தில் நகைச்சுவை இருக்கும்



இயக்குநர் பாரி கே.விஜய் இயக்கத்தில், வைபவ், பார்வதி நடிப்பில், கலக்கலான ஃபேண்டசி நகைச்சுவை கதையம்சம் கொண்ட படமாக ஆலம்பனா உருவாகி இருக்கிறது.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை குடும்பத்துடன் அனைவரும் விரும்பிப் பார்க்கும் வகையில் உருவாகி இருக்கும் ஆலம்பனா டிசெம்பர் 15ஆம் திகதி வெளியாக இருக்கிறது.

இந்த நிலையில், படம் குறித்த நிகழ்ச்சியில் பேசிய வைபவ் படத்தில் உண்மையில் சிரித்து மகிழக்கூடிய வகையில் காமெடி இருக்கும் என்றும், முனீஷ்காந்த், காளிவெங்கட் போன்ற சீனியர்களுடன் நடித்தது மிக மகிழ்ச்சியாக இருந்ததாகவும் தெரிவித்தார்.

அத்துடன், படத்தில் உண்மையிலேயே சிரித்து மகிழும் அளவு நகைச்சுவை இருக்கும் என்றும் தனக்கு புதுவிதமான படமாகவும், ரசிகர்களுக்குப் பிடிக்கும் படமாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.



# சீரியல் நடிகையுடன் திருமணம்

தமிழ் சினிமாவில் தனி கவனம் பெற்று வரும் நகைச்சுவை நடிகரான ரெடின் கிங்ஸ்லி சீரியல் நடிகை சங்கீதாவை திருமணம் செய்துள்ளார்.

தமிழ் திரையுலகில் வளர்ந்து வரும் நகைச்சுவை நடிகர் ரெடின் கிங்ஸ்லி, கோலமாவு கோகிலா, எல்.கே.ஜி., டாக்டர், அண்ணாத்த, காத்து வாக்குல ரெண்டு காதல், ஏஜண்ட் கண்ணாயிரம், காரி, கட்டா குஸ்தி, நாய்சேகர் ரிட்டர்ன்ஸ், ஜெயிலர் என பல்வேறு படங்களில் நடித்துள்ளார்.

இதேவேளை, சீரியல் நடிகையான சங்கீதா பாரிஸ் ஜெயராஜ், மாஸ்டர் போன்ற படங்களில் நடித்து பிரபலமடைந்தவர்.

புது டெல்லி

## ஜம்மு–காஷ்மீர் விவகாரம்

# ‘சட்டப்பிரிவு 370 இரத்து’ செல்லும்



ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்து சட்டப்பிரிவு 370-ஐ 2019 ஆண்டு மத்திய அரசு இரத்து செய்தது. மேலும் மாநிலத்தை இரண்டு யூனியன் பிரதேசங்களாக பிரித்தது.

சிறப்பு அந்தஸ்து சட்டப்பிரிவு 370-ஐ இரத்து செய்ததை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு இந்த வழக்கு விசாரணை முடிந்து திங்கட்கிழமை (11) தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதில் மூன்று விதமான தீர்ப்புகள் வழங்கப்பட்டன. தலைமை நீதிபதி சந்திரசூட் ஒரு தீர்ப்பு வழங்கினார். பி.ஆர்.கவாய், சூர்யகாந்த் ஆகியோர் ஒரு தீர்ப்பு வழங்கினர். நீதிபதிகள் எஸ்.கே.கவுல், சஞ்சீவ் கண்ணா ஆகியோர் ஒரு தீர்ப்புகள் வழங்கினர்.

மூன்று தீர்ப்புகள் வழங்கப்பட்டாலும் ஒரே தீர்ப்பாக எடுத்துக்கொள்ள வேண்டும் என தலைமை நீதிபதி தெரிவித்தார். பின்னர் ஒட்டுமொத்தமாக சிறப்பு அந்தஸ்து சட்டப்பிரிவு 370 இரத்து செல்லும் என தீர்ப்பு வழங்கப்பட்டது.

தீர்ப்பின்போது தலைமை நீதிபதி சந்திரசூட் தனது தீர்ப்பில் கூறியதாகவது,

1. ஜம்மு-காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய சட்டப்பிரிவு 370 தற்காலிகமானது.
2. ஜம்மு-காஷ்மீர் மாநிலம் மற்ற மாநிலங்களில் இருந்து வேறுபட்ட இறையாண்மையை கொண்டிருக்கவில்லை.
3. இந்தியாவுடன் இணைந்தபோது இறையாண்மையின் ஒரு பகுதியை தக்க வைத்துக்கொள்வில்லை.
4. ஜனாதிபதி ஆட்சி நடைபெறும்போது மாற்ற முடியாத அதிகாரத்தை செயல்படுத்தும் நடவடிக்கையை எடுக்க முடியாது என்ற வாதத்தை ஏற்க முடியாது.
5. மத்திய அரசிற்கான அரசியலமைப்பு சட்டம் அனைத்தும் ஜம்மு-காஷ்மீருக்கும் பொருந்தும்.
6. குடியரசுத் தலைவர் ஆட்சி அங்கு இருக்கும்போது ஒன்றிய அரசு எடுக்கும் முடிவுகளை கேள்விக்கு உள்ளாக்க முடியாது.
7. காஷ்மீருக்கு தனி ஆட்சி உரிமை கிடையாது.
8. இந்திய அரசியலமைப்போடு இணைந்ததுதான் காஷ்மீர் அரசியலமைப்பு.

மேலும், ஜம்மு-காஷ்மீரில் அடுத்த ஆண்டு செப்டெம்பர் மாதத்திற்குள் தேர்தல் நடத்த வேண்டும் எனவும் தீர்ப்பளித்துள்ளது.

மத்திய பிரதேசம்

## உணவுகுழாயில் கொட்டிய தேனீ: இளைஞன் மரணம்

உணவு குழாயில் தேனீ ஒன்று கடித்தமையால் இளைஞன் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம், இந்தியாவில் இடம்பெற்றுள்ளது.

மத்திய பிரதேசத்தின் போபால் நகரில் உள்ள பெரேசியா பகுதியைச் சேர்ந்த 22 வயது ஹிரேந்திரா சிங், தாகம் எடுத்ததால், ஒரு டம்ளரில் தண்ணீரை எடுத்துக் குடித்துள்ளார்.

தண்ணீரைக் குடித்த சிறிது நேரத்திலேயே அவருக்கு சுவாச கோளாறு ஏற்பட்டுள்ளது. அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கு, சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இதனிடையே, மருத்துவர்கள், ஹிரேந்திரா சிங் சிகிச்சையின் போது வாந்தி எடுத்ததில் தேனீ ஒன்று வெளியில் வந்துள்ளது, தேனீயானது அவரது உணவு குழாய்க்குள் சென்று கடித்துள்ளமையே அவரின் இறப்புக்குக் காரணம் என தெரிவித்துள்ளனர்.

புது டெல்லி

## “ உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வரலாற்று சிறப்புமிக்கது”



ஜம்மு-காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்து சட்டப்பிரிவு 370-ஐ இரத்து செய்ததை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு விசாரணை முடிந்து திங்கட்கிழமை (11) சிறப்பு அந்தஸ்து சட்டப்பிரிவு 370 இரத்து செல்லும் என தீர்ப்பு வழங்கப்பட்டது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பாக பிரதமர் மோடி, “சட்டப்பிரிவு 370-ஐ இரத்து செய்வது தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வரலாற்று சிறப்புமிக்கது. ஆகஸ்ட் 5, 2019 அன்று பாராளுமன்றம் எடுத்த முடிவை அரசியல் அமைப்பு ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக்கில் உள்ள நமது சகோதர மற்றும் சகோதரிகளின் நம்பிக்கை, முன்னேற்றம், ஒற்றுமையின் ஒரு உறுதியான அறிவிப்பாகும்.

ஜம்மு- காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய பகுதிகளில் உள்ள மக்களுக்கு உங்கள் கனவுகளை நிறைவேற்றுவதற்கான எங்கள் அர்ப்பணிப்பு, அசையாதது என்பதை நான் உறுதியளிக்க விரும்புகிறேன் என்றார்.

காசா

## “பிணைக்கைதிகள் உயிருடன் திரும்ப மாட்டார்கள்”



இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினர் இடையே போர் தொடங்கி 2 மாதத்தை கடந்து விட்டது. இன்னும் யுத்தம் முடிவுக்கு வராமல் தொடர்ந்து நீடித்து வருகிறது. இடையில் 7 நாட்கள் தற்காலிக போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

ஆனால், மீண்டும் போர் தொடங்கி இருப்பதால் தற்போது இஸ்ரேல் இராணுவத்தினர் காசா முழுவதும் சுற்றி வளைத்து சரமாரியாக தாக்குதல் வருகின்றனர். ஹமாஸ் அமைப்பினரை குறிவைத்து இந்த அதிரடி தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

தொடர் தாக்குதலால் நிலைகுலைந்துள்ள காசா நகரம் இனி மேம்படுத்த முடியாத அளவில் கடும் பேரழிவை சந்தித்துள்ளது. ஹமாஸ் அமைப்பினரை ஒழிக்கும் வரை போர் நீடிக்கும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் தற்காலிக போர் நிறுத்தத்தின் போது பிணைக்கைதிகளாக பிடித்து வைத்து இருந்த 240 பேரில் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என 105 இஸ்ரேலியர்களை ஹமாஸ் விடுவித்தது. இதற்கு ஈடாக இஸ்ரேல் சிறையில் இருந்த பாலஸ்தீன கைதிகளை அந்நாடு விடுதலை செய்தது.

இந்நிலையில், தற்போது இஸ்ரேல் படையினர் மூர்க்கத்தனமாக நடத்தி வரும் தாக்குதலுக்கு ஹமாஸ் அமைப்பினரும் பதிலடி கொடுத்து வருகின்றனர்.

பல இடங்களில் இரு படையினரும் நேருக்கு நேர் சண்டையிட்டு வருகின்றனர்.

இஸ்ரேல்

## “ஹமாஸ் முடிவுக்கு வருவது தொடங்கி விட்டது”

ஹமாஸ் அமைப்புக்கு எதிராக காசா மீது கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் கடும் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், சண்டை முடிவுக்கு வருவதாகவும், ஹமாஸ் அமைப்பினர் இனிமேல் சரணடைவதுதான் என இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நேதன்யாகு கூறுகையில், “சண்டை இன்னும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால், ஹமாஸ் முடிவுக்கு வருவது தொடங்கிவிட்டது, சண்டை முடிகிறது.

ஹமாஸ் தலைவருக்காக உயிர் இழக்காதீர்கள். ஹமாஸ் அமைப்பினருக்கு நான் சொல்லிக் கொள்வது இதுதான். கடந்த சில தினங்களாக பல ஹமாஸ் அமைப்பினர் எங்களது படைகளிடம் சரண் அடைந்துள்ளனர்” என்றார்.

## ‘பறக்கும் ஹோட்டல்’



வானில் பறக்கும் நட்சத்திர ஹோட்டலை தனியார் நிறுவனம் ஒன்று உருவாக்கியுள்ளது.

அதாவது க்ரூஸ் எனப்படும் சொகுசுக் கப்பல்களை போன்று ஸ்கை க்ரூஸை உருவாக்கி உள்ளனர். இந்த ஸ்கை க்ரூஸின் வீடியோவை ஏமன் நாட்டு பொறியாளர் ஹஷேம் அல்-கைலி என்பவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், “இது அணுசக்தியால் இயங்கும் ஒரு பெரிய ‘பறக்கும் ஹோட்டல்’. இது வானத்தில் பறந்து கொண்டே இருக்கும். இதில் ஒரே நேரத்தில் 5,000 பயணிகள் தங்க முடியும். காற்றில் பறக்கும் மேகங்களுக்கு மத்தியில் இருப்பது யாரையும் சிலிர்க்க வைக்கும். உடற்பயிற்சி கூடம் முதல் நீச்சல் குளம் வரை அனைத்து வசதிகளும் இதில் இருக்கும். மேலும், இந்த பறக்கும் ஹோட்டலில் வணிக வளாகம், பார், உணவகம், விளையாட்டு வளாகம், தியேட்டர் ஆகியவற்றுடன், குழந்தைகள் விளையாடும் மைதானமும் கட்டப்பட்டுள்ளது. ஒரு மாநாட்டு மையமும் இருக்கும். அங்கு எந்த நிகழ்ச்சியையும் ஏற்பாடு செய்யலாம் என்றார்.

## ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# ஜிரோனாவிடம் தோற்ற பார்சிலோனா



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகாத் தொடரில், தமது மைதானத்தில் நடைபெற்ற ஜிரோனா உடனான போட்டியில் 2-4 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பார்சிலோனா தோற்றது.

பார்சிலோனா சார்பாக றொபேர்ட் லெவன்டோஸ்கி, இல்கி குன்டோகன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். ஜிரோனா சார்பாக, அர்டெம் டொவ்பிக், மிகேல் குடிரெஸ், வலேரி பெர்ணாண்டஸ், கிறிஸ்தியன் ஸ்டுவானி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

## இத்தாலிய சீரி ஏ தொடர்:

## சமநிலையில் றோமா பியொரென்டினா போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற பியொரென்டினாவுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் றோமா சமப்படுத்தியது.

றோமா சார்பாகப் பெறப்பட்ட கோலை றொமெலு லுக்காக்கு பெற்றதோடு, பியொரென்டினா சார்பாகப் பெறப்பட்ட கோலை லூகாஸ் மார்டினெஸ் குவார்ட்டா பெற்றிருந்தார்.





## இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## எவெர்ற்றனிடம் தோற்ற செல்சி

இங்கிலாந்துக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், எவெர்ற்றனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் செல்சி தோற்றது.

எவெர்ற்றன் சார்பாக அப்துல்லாயி டூக்கோரே, லூயிஸ் டொபின் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

## சிநேகபூர்வ போட்டியில் அர் ரஸாத்தை

# வென்ற காவத்தைமுனை மில்லத்

■ அஸ்ஹர் இப்றாஹீம்



ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற அர் ரஸாத் விளையாட்டுக் கழகத்துடனான சிநேகபூர்வ இருபதுக்கு-20 போட்டியில் வாழைச்சேனை, காவத்தைமுனை மில்லத் விளையாட்டுக் கழகம் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்படுத்தாடிய அர் ரஸாத் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 155 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மில்லத் 18.5 ஓவர்களில் 5 விக்கட்டுக்களை இழந்த நிலையில், வெற்றி இலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக மில்லத் வீரர் எஸ்.எப்.ஸியாம் தெரிவு செய்யப்பட்டார்.

## தேசிய மட்ட மூவேதாய் சம்பியன்ஷிப் போட்டியில்

# ஐ.எம்.ஏ. ஸ்ரீலங்கா அமைப்புக்கு ஆறு விஷேட விருதுகள்



■ அஸ்ஹர் இப்றாஹீம்

தேசிய மட்ட மூவேதாய் குத்துச் சண்டை சம்பியன்சிப் போட்டிகளில் 12 வீரர்களுக்கு விஷேட விருதுகள் வழங்கப்பட்ட நிலையில், இவற்றுள் ஆறு விருதுகளை ஐ.எம்.ஏ. ஸ்ரீலங்கா அமைப்பு சுவீகரித்தது.

12, 14, 16, 18, 23 மற்றும் 43 வயதுப் பிரிவுகளிலும் இலங்கை தரைப்படை, இலங்கை கடற்படை, ஐ.எம்.ஏ. ஸ்ரீலங்கா உட்பட 29 கழகங்களை உள்ளடக்கிய 600க்கும் மேற்பட்ட வீரர்கள் இப்போட்டியில் பங்கேற்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 12, டிசெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.